**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE THIRUVIDAIMARUTHUR**

| | |
|---|---|
| Calender : | |
| Miscellaneous : | Village: |
| Preliminary Register : CC.366/2019 | Age :59 |
| Sessions : | Taluk : |
| Deposition of Witness for : LW2/ PW-2 | |
| Name : ஆதிகேசன், சிறப்பு உதவி ஆய்வாளர் | Religion : |
| Father's/Husband's Name : | |
| Nationality : Indian | |

**Solemnly affirmed in accordance with the provisions of The Oaths Act 1969 on the day of 18.09.2024.**

சாட்சியை திருவிடைமருதூர் தலைமைக் காவலர் திருமதி. அபிராமி என்பவர் அடையாளம் காட்டி முன் நிறுத்தியவரை சத்தியபிரமாணம் செய்து முதல் விசாரணை பதியப்படுகிறது.

**எதிரி ஆஜரில் இருந்தார்.**

**முதல் விசாரணை**

நான் தற்போது திருவிடை காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். நான் கடந்த 2014ம் ஆண்டு திருவிடைமருதூர் காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணிபுரிந்தபோது 24.07.2014ம் தேதி மதியம் சுமார் 2.30 மணியளவில் காவல் ஆய்வாளர் சிங்காரவேலன் அவர்களுடன் நானும், சிறப்பு உதவி ஆய்வாளர் ஆதிகேசவன் என்பவருடன் ஆடுதுறையில் ரோந்து பணி செய்து கொண்டிருந்தோம். அப்போது காவல் ஆய்வாளருக்கு கிடைத்த ரகசிய தகவலின்

அடிப்படையில் ஆடுதுறை மெயின்ரோட்டில் இருந்த ஒரு சி.டி. கடையில் சோதனை செய்தோம். அந்த கடையில் உரிய அரசு அனுமதியின்றி புதிதாக ரிலிசான 159 சினிமா பட சி.டி க்கள் இருந்தது. மேற்படி சிடிக்களுக்கு அரசு அனுமதி இல்லாததால் காவல் ஆய்வாளர் அதனை எங்கள் முன்னிலையில் ஒரு கைப்பற்றுதல் மகசர் மூலமாக கைப்பற்றி எங்களிடம் சாட்சி கையொப்பம் பெற்றார். தற்போது நீதிமன்றத்தில் காட்டப்படும் கைப்பற்றுதல் மகசரில் உள்ள இரண்டாவது சாட்சி கையொப்பம் என்னுடையதுதான். பின்னர் கடையின் உரிமையாளர் எதிரி சேது மற்றும் வழக்கு சொத்து சகிதம் நிலையம் ஆஜராகி எதிரி மீது சட்டப் பிரிவுகள் 51 உ/இ 63 A, Copyrights Act ன் கீழ் வழக்கு பதிவு செய்து எதிரியை காரணம் கூறி கைது செய்து உரிய நடைமுறைக்கு பின் நிலைய பிணையில் காவல் ஆய்வாளர் விடுவித்தார். தற்போது நீதிமன்றத்தில் ஆஜரில் உள்ள எதிரிதான் அந்த நபர் ஆவார். தற்போது நீதிமன்றத்தில் காட்டப்படும் சி.டிக்கள்தான் காவல் ஆய்வாளரால் கைப்பற்றப்பட்டதாகும். காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

## எதிரி தரப்பு குறுக்கு விசாரணை

எனக்கு பொதுநாட்குறிப்பு உள்ளதா என்றால் காவல் நிலையத்தில் பொதுநாட்குறிப்பு உள்ளது. நாங்கள் ரோந்து சென்ற விவரம் குறித்து பொதுநாட்குறிப்பில் பதிவு செய்யப்படும் என்றால் சரிதான். நாங்கள் எந்த இடத்தில் இருந்தபோது காவல் ஆய்வாளருக்கு தகவல் கிடைத்தது என்றால் எப்போது தகவல் கிடைத்தது என்று தெரியவில்லை. காவல் ஆய்வாளருக்கு தான் தெரியும். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் கடைக்கு அருகே நிறைய கடைகள் உள்ளது என்றால் சரிதான். அந்த கடைகளில் உள்ள நபர்களை இந்த வழக்கில் சாட்சியாக சேர்த்து விசாரிக்கவில்லை என்றால் அவர்கள் சாட்சியம் அளிக்க முன்வராததால் விசாரிக்கவில்லை. கைப்பற்றுதல் மகசர் யார் எழுதியது என்றால் காவல் ஆய்வாளர் எழுதினார். அசாஆ 1 கைப்பற்றுதல் மகசர் பிரிண்டடு பார்மாக

உள்ளது என்றால் சரியல்ல கையால் எழுதப்பட்டுள்ளது. நாங்கள் சம்பவ இடம் செல்லவில்லை என்றாலும் எங்கள் முன்னிலையில் வழக்கு சொத்துகள் எதுவும் கைப்பற்றப்படவில்லை என்றாலும், நாங்கள் கையொப்பம் செய்ததாக சொல்லும் கைப்பற்றுதல் மகசர் காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டது என்றாலும் சரியல்ல. காவல் நிலைய புள்ளி விவர கணக்கிற்காக காவல் ஆய்வாளர் எதிரி மீது பொய்யாக பதிவு செய்த வழக்கிற்கு அனுசரணையாக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

**மறுவிசாரணை.** இல்லை

என் முன்னால் எதிரியின் முன்னிலையில் சாட்சியம் அளிக்கப்பட்டு, கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, படித்துக்காட்டப்பட்டு சரியானதென்று ஏற்கப்பட்டு கையொப்பம் செய்தார்.

**ஒப்பம்/- நா. சிவபழனி,**

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**
**திருவிடைமருதூர்.**

# DEPOSITION OF WITNESS
## (Chapter XXIII Code of Criminal Procedure)
## IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE THIRUVIDAIMARUTHUR

| | |
|---|---|
| Calender : | |
| Miscellaneous : | Village: |
| Preliminary Register : CC.366/2019 | Age :65 |
| Sessions : | Taluk : |
| Deposition of Witness for : LW1/ PW-1 | |
| Name : சேகரன், சிறப்பு உதவி ஆய்வாளர்(ஓய்வு) | Religion : |
| Father's/Husband's Name : | |
| Nationality : Indian | |

**Solemnly affirmed in accordance with the provisions of The Oaths Act 1969 on the day of 18.09.2024.**

சாட்சியை திருவிடைமருதூர் தலைமைக் காவலர் திருமதி. அபிராமி என்பவர் அடையாளம் காட்டி முன் நிறுத்தியவரை சத்தியபிரமாணம் செய்து முதல் விசாரணை பதியப்படுகிறது.

**எதிரி ஆஜரில் இருந்தார்.**

**முதல் விசாரணை**

நான் தமிழ்நாடு காவல் துறையில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணிபுரிந்து ஓய்வுபெற்று தற்போது செம்மங்குடி கிராமத்தில் வசித்து வருகிறேன். நான் கடந்த 2014 ம் ஆண்டு திருவிடைமருதூர் காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணிபுரிந்தபோது 24.07.2014 ம் தேதி மதியம் சுமார் 2.30 மணியளவில் காவல் ஆய்வாளர் சிங்காரவேலன் அவர்களுடன் நானும், சிறப்பு உதவி ஆய்வாளர் ஆதிகேசவன் என்பவருடன் ஆடுதுறையில் ரோந்து பணி செய்து கொண்டிருந்தோம். அப்போது காவல்

ஆய்வாளருக்கு கிடைத்த ரகசிய தகவலின் அடிப்படையில் ஆடுதுறை மெயின்ரோட்டில் இருந்த ராஜா மியூசிக்கல் என்ற கடையில் சோதனை செய்தோம். அந்த கடையில் உரிய அரசு அனுமதியின்றி 159 சினிமா பட சி.டி க்கள் இருந்தது. மேற்படி சிடிக்களுக்கு அரசு அனுமதி இல்லாததால் காவல் ஆய்வாளர் அதனை எங்கள் முன்னிலையில் ஒரு கைப்பற்றுதல் மகசர் மூலமாக கைப்பற்றி எங்களிடம் சாட்சி கையொப்பம் பெற்றார். தற்போது நீதிமன்றத்தில் காட்டப்படும் கைப்பற்றுதல் மகசரில் உள்ள முதலாவது சாட்சி கையொப்பம் என்னுடையதுதான். ( மேற்படி கைப்பற்றுதல் மகசர் **அசாஆ 1** ஆக குறியீடு செய்யப்படுகிறது) பின்னர் கடையின் உரிமையாளர் எதிரி சேது மற்றும் வழக்கு சொத்து சகிதம் நிலையம் ஆஜராகி எதிரி மீது சட்டப் பிரிவுகள் 51 உ/இ 63 A, Copyrights Act ன் கீழ் வழக்கு பதிவு செய்து எதிரியை காரணம் கூறி கைது செய்து உரிய நடைமுறைக்கு பின் நிலைய பிணையில் காவல் ஆய்வாளர் விடுவித்தார். தற்போது நீதிமன்றத்தில் ஆஜரில் உள்ள எதிரிதான் அந்த நபர் ஆவார். தற்போது நீதிமன்றத்தில் காட்டப்படும் சி.டிக்கள்தான் காவல் ஆய்வாளரால் கைப்பற்றப்பட்டதாகும். காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

## எதிரி தரப்பு குறுக்கு விசாரணை

காவல் நிலையத்தில் பொதுநாட்குறிப்பு உள்ளதா என்றால் காவல் நிலையத்தில் பொதுநாட்குறிப்பு உள்ளது. நாங்கள் ரோந்து சென்ற விவரம் குறித்து பொதுநாட்குறிப்பில் பதிவு செய்யப்படும் என்றால் சரிதான். நாங்கள் எந்த இடத்தில் இருந்தபோது காவல் ஆய்வாளருக்கு தகவல் கிடைத்தது என்றால் எப்போது தகவல் கிடைத்தது என்று தெரியவில்லை. காவல் ஆய்வாளருக்கு தான் தெரியும். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் கடைக்கு அருகே நிறைய கடைகள் உள்ளது என்றால் சரிதான். அந்த கடைகளில் உள்ள நபர்களை இந்த வழக்கில் சாட்சியாக சேர்த்து விசாரிக்கவில்லை என்றால் அவர்கள் சாட்சியம் அளிக்க முன்வராததால் விசாரிக்கவில்லை. கைப்பற்றுதல் மகசர் யார் எழுதியது

என்றால் நான்தான் எழுதினேன். அசாஆ 1 கைப்பற்றுதல் மகசர் பிரிண்டட்டு பார்மில் கையால் எழுதி பூர்த்தி செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். நாங்கள் சம்பவ இடம் செல்லவில்லை என்றாலும் எங்கள் முன்னிலையில் வழக்கு சொத்துகள் எதுவும் கைப்பற்றப்படவில்லை என்றாலும், நாங்கள் கையொப்பம் செய்ததாக சொல்லும் கைப்பற்றுதல் மகசர் காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டது என்றாலும் சரியல்ல. காவல் நிலைய புள்ளி விவர கணக்கிற்காக காவல் ஆய்வாளர் எதிரி மீது பொய்யாக பதிவு செய்த வழக்கிற்கு அனுசரணையாக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

**மறுவிசாரணை.** இல்லை

என் முன்னால் எதிரியின் முன்னிலையில் சாட்சியம் அளிக்கப்பட்டு, கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, படித்துக்காட்டப்பட்டு சரியானதென்று ஏற்கப்பட்டு கையொப்பம் செய்தார்.

**ஒப்பம்/- நா. சிவபழனி,**

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**
**திருவிடைமருதூர்.**